# அறிவுச்சுரங்கம் கல்வியகம்

ARIBUCHCHURANGAM INSTITUTE VEERAMUNAI



வாழ்க்கையை வளமாக்க
வாய்ப்புக்களை வழங்கிடுவோம்.

ARIBUCHCHURANGAM INSTITUTE VEERAMUNAI-04, TEL: 0772633389

**வீரமுனை**

அறிவுச்சுரங்கம் கல்வியகம் வெளியீடு

## அறிவுச்சுரங்கம்

அஜீந்தன் ஆசானின்

சந்திப்போம்...
சிந்திப்போம்...
சாதனை படைப்போம்...



# புலமைப்பாதை

# தமிழ்மொழி

(100 வினாக்கள்)

**வெளியீடு 05**

# 5 தரம்

புதிய பாடத்திட்டம்

ஆசிரியர்
S.அஜீந்தன் (B.A)
077 26 333 89

## வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

விண்வெளிக்குப் பயணம் செய்த முதல் மனிதர் யூரி ககாரின் ஆவார். அவர் ரஷ்யா நாட்டைச் சேர்ந்தவர் ஆவார்.

யூரி ககாரின் ரஷ்யாவில் மொஸ்கோ நகருக்கு மேற்கே அமைந்துள்ள க்ஸாட்ஸ்க் பகுதியில் உள்ள குளுஷினோ என்னும் இடத்தில் **1934** ஆம் ஆண்டு மார்ச் மாதம் **9** ஆந் திகதி பிறந்தார்.



அவர் பூமியை ஒருமுறை வலம் வந்தார். அவரது விண்கலம் ஒரு மணித்தியாலம் நாற்பத்தெட்டு நிமிடங்கள் விண்ணில் பறந்தது. அதாவது **108** நிமிடங்கள் பறந்தது. அவர் சென்ற விண்கலத்தின் பெயர் வொஸ்ரொக் - **1** ஆகும். யூரி ககாரின் அவரது விண்வெளியில் பறந்த உணர்வை ''வயிற்றுக்குள் பட்டாம்பூச்சிகள் சிறகடித்தது போல் இருந்தது'' எனக் கூறினார்.

யூரி ககாரின் சிறு வயதில் இருந்த போதே விமானங்களை ஆர்வத்துடன் பார்த்து இரசிக்கத் தொடங்கினார். தானும் இதுபோல் பறக்க வேண்டும் என்பதை வாழ்நாள் கனவாகக் கொண்டார். அவர் 1961 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 12 ஆந் திகதி விண்வெளியில் பயணம் செய்தார். யூரி ககாரினின் நினைவாக அவர் விண்ணில் பறந்த தினத்தை சர்வதேச விண்வெளி வீரர்கள் தினமாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.

தற்போது உலகெங்கும் ஏப்பிரல் **12** ஆந்திகதி சர்வதேச விண்வெளி வீரர்கள் தினமாக கொண்டாடப்படுகின்றது. யூரி ககாரின் எண்ணற்ற விமானிகளுக்கு விண்வெளிப் பயணப் பயிற்சிகளை வழங்கினார்.

**1968** ஆம் ஆண்டு அவர் ஓட்டிச் சென்ற விமானம் விபத்துக்குள்ளாகியதால் இவ்வுலகை விட்டுப் பிரிந்தார். அவருக்கு இறக்கும் போது வயது **34** ஆகும்.

01) விண்வெளிக்குப் பயணம் செய்த முதல் மனிதர் யார்?

.....................................................................................................

02) அவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

.....................................................................................................

03) அவர் எத்தனையாம் ஆண்டு பிறந்தார்?

....................................................................................................

04) அவர் சென்ற விண்கலத்தின் பெயர் என்ன?

.....................................................................................................

05) அந்த விண்கலம் எத்தனை மணிநேரம் பறந்தது?

.....................................................................................................

06) யூரி ககாரின் விண்வெளியில் பறந்த அனுபவத்தை எவ்வாறு விபரித்தார்?

......................................................................................................................

.............................................................................................................

07) யூரி ககாரின் இறக்கும் போது அவருக்கு எத்தனை வயதாகும்?

.....................................................................................................

08) சர்வதேச விண்வெளி வீரர் தினம் எப்போது கொண்டாடப்படுகின்றது?

.....................................................................................................

❖ விழாக்களை எழுதுக.

09) இருபத்தைந்தாவது ஆண்டில் எடுக்கப்படும் விழா எது?

……………………………………………………………………….

10) ஐம்பதாவது ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா எது?

…………………………………………………………………………..

11) அறுபதாவது ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா எது?

………………………………………………………………………….

12) எழுபத்தைந்தாவது ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா எது?

……………………………………………………………………………………

13) நூறாவது ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா எது?

……………………………………………………………………………………..

சேர்த்து எழுதுக.

14) நெல் + வயல் = ………………………………………………..

15) பல் +பொடி = ………………………………………………..

16) மலை+ உச்சி = ………………………………………………..

17) மரம் +வேர் = ………………………………………………..

18) முள் +செடி = ………………………………………………..

19) தமிழ் + சொல் = ………………………………………………..

20) மண் +குடம் = ………………………………………………..

21) மலர் +செண்டு = ………………………………………………..

22) பூ +கொடி = ………………………………………………..

23) பனை +காய் = ………………………………………………..

24) வடக்கு +கிழக்கு = ………………………………………………..

25) கப்பல் +கூலி = ………………………………………………..

26) பச்சை +கிளி = ………………………………………………..

27) மனம் +மற்றம் = ………………………………………………..

28) தேன் +மொழி = ………………………………………………..

29) வாழை +காய் = ………………………………………………..

30) பசு+கன்று = ………………………………………………..

31) காவி+ உடை = ………………………………………………..

32) பத்து +ஏழு = ………………………………………..

33) நான்கு+ நூறு = ………………………………………..

34) ஆறு +மலை = ………………………………………..

35) வெண்டி +செடி = ………………………………………..

36) தெற்கு +திசை = ………………………………………..

37) தெங்கு +காய் = ………………………………………..

38) வடக்கு +மேற்கு = ………………………………………..

39) காடு +அரசன் = ………………………………………..

40) கயிறு +கட்டில் = ………………………………………..

41) புது +பானை = ………………………………………..

42) ஒன்று +ஊர் = ………………………………………..

43) ஒன்று +ஒன்று = ………………………………………..

44) மூன்று +மூன்று = ………………………………………..

45) தேயிலை +நீர் = ………………………………………..

46) தேன் +நீர் = ………………………………………..

47) வெம்மை +நீர் = ………………………………………..

48) அடி +சுவடு = ………………………………………..

49) நன்மை +செய்தி = ………………………………………..

50) ஐந்து +ஐந்து = ………………………………………..

51) குரங்கு +குட்டி = ………………………………………..

52) தேன் +குழல் = ………………………………………..

53) பொன் +தகடு = ………………………………………..

54) பச்சை +இலை = ……………………………………………..

55) மரம் +கொம்பு = ……………………………………………..

56) மூன்று +நூறு = ……………………………………………..

57) முன்பு +நூறு = ……………………………………………..

58) மலை +அரசன் = ……………………………………………..

59) கருமை +பலகை = ……………………………………………..

60) திரை +சீலை = ……………………………………………..

61) இரண்டு +பத்து = ……………………………………………..

62) பட்டு +துணி = ……………………………………………..

63) மலை+குகை = ……………………………………………..

64) கீரை+பாத்தி = ……………………………………………..

65) கத்தரி +கோல் = ……………………………………………..

66) மரம் + தோட்டம் = ……………………………………………..

67) மண் +கலம் = ……………………………………………..

68) ஐந்து+ புலம் = ……………………………………………..

❖ பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

69) ‘‘மதி’’ என்பதன் ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக?

………………………………………………………………………………

70) ‘‘பெருமை’’ என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக?

………………………………………………………………………………

71) ‘‘செல்வன்’’ என்பதன் எதிர்ப்பாற் சொல்லை எழுதுக?

………………………………………………………………………………

72) "ஏர்" என்பதன் ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக?

.......................................................................................

73) "மருத்துவன்" என்பதன் எதிர்ப்பாற் சொல்லை எழுதுக?

.......................................................................................

74) "இன்சொல்" என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக?

.......................................................................................

75) பத்து ஆண்டுகளை எவ்வாறு அழைப்பார்கள்?

…………………………………………………………………

❖ பின்வரும் பெண்பால் வாக்கியங்களை ஆண்பால் வாக்கியங்களாக மாற்றி எழுதுக.

76) எனது தங்கை கதை கூறினாள்.

.........................................................................................................

77) அவரது மாமா வெளிநாட்டில் வசிக்கிறார்.

...............................................................................................................

...............................................................................................................

78) நான் நண்பனின் வீட்டிற்குச் சென்றேன்.

...............................................................................................................

...............................................................................................................

79) விடுமுறைக்கு மாமாவின் வீட்டிற்குச் செல்வேன்.

...............................................................................................................

...............................................................................................................

❖ அடைப்புக் குறிக்குள் உள்ள பொருத்தமான சொல்லின் கீழ்க் கோடிடுக.

80) நான் (வந்தேன், வந்தோம்)

81) நாம் (படிக்கிறேன், படிக்கிறோம்)

82) நாங்கள் (ஓடுவோம், ஓடுவீர்)

83) நீ (பார்த்தாய், பார்த்தீர்)

84) நீங்கள் (செய்கிறாய், செய்கிறீர்கள்)

85) சிறுவன் (கூறினான், கூறினார்)

86) சிறுமி (கழுவினாள், கழுவினார்)

87) மாணவர் (விளையாடினான், விளையாடினர்)

88) யானை (எழுந்தது, எழுந்தன)

89) கைகள் (உயர்ந்தது, உயர்ந்தன)

❖ பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் சரி எனவும், பிழையாயின் பிழை எனவும் **எழுதுக.**

90) ‘‘வைத்தியர்’’ உயர்திணை ஒருமைப் பெயர்ச் சொற்களாகும். (...........)

91) ‘‘வாகனங்கள்’’ அஃறிணை ஒருமைப் பெயர்ச் சொற்களாகும். (...........)

92) ‘‘ஆசிரியர்கள்’’ உயர்திணை பன்மைப் பெயர்சொற்களாகும். (...........)

93) ‘‘கடிகாரம்’’ அஃறிணை பன்மைப் பெயர்ச்சொற்களாகும். (...........)

94) ‘‘மலர்கள்’’ உயர்திணை ஒருமைப் பெயர்ச்சொற்களாகும். (...........)

95) ‘‘விசிறிகள்’’ அஃறிணை பன்மைப் பெயர்ச்சொற்களாகும். (...........)

96) ‘‘மீனவர்கள்’’ உயர்திணை பன்மைப் பெயர்ச்சொற்களாகும். (...........)

97) ‘‘மரங்கள்’’ உயர்திணை பன்மைப் பெயர்ச்சொற்களாகும். (...........)

❖ கீழே தரப்பட்டுள்ளவற்றிற்குப் அடைப்புக்குள் இருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

(நாம், வீடு, மாமா, கற்கள், நான், சிறுவர்கள்)

98) உயர்திணை , பன்மைப் படர்க்கைப் பெயர்ச் சொல் -

……………………………………………………………………………………………

99) உயர்திணை, ஒருமைத் தன்மைப் பெயர்ச் சொல் -

……………………………………………………………………………………………

100) தன்மைப் பன்மைப் பெயர்ச் சொல் -

……………………………………………………………………………………………